28th March 1969]

Smuggling of rice

* 264 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether a lorry smuggling rice from Kancheepuram was apprehended in the first week of March 1968 ;

(*b*) if so, the number of rice bags seized ; and

(*c*) whether any prosecution was launched against those who were responsible for this smuggling ?

அரிசி கடத்தல்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில் :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) 1968 மார்ச் முதல் வாரத்தில் காஞ்சிபுரத்திலிருந்து அரிசி கடத்தி வந்த லாரி ஒன்று பிடிபட்டதா ?

(இ) ஆமெனில், எத்தனை மூட்டை அரிசி பறிமுதல் செய்யப்பட்டது?

(உ) கள்ளக் கடத்தலுக்குக் காரணமாக இருந்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) 5 மூட்டை அரிசி.

(உ) கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட எ.பி.சி. 2403 எண்ணுள்ள லாரியை கைப்பற்றும்பொழுது, லாரியில் திரு. சுப்பாரெட்டி, லாரி இயக்குநர், திரு. முகபூப்ஷா, குரோம்பேட்டை, திரு. கந்தசாமி ஆகியோர் இருந்தனர். அவர்கள் மீது செங்கற்பட்டு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கில் திரு. சுப்பாரெட்டி ரூ. 50 அபராதமும், கட்டத்தவறினுல் இரண்டு வாரம் கடுங்காவல் தண்டனையும், திரு. மகபூப்கானுக்கு ரூ. 25 அபராதமும், கட்டத்தவறினுல் ஒரு வாரம் கடுங்காவல் தண்டனையும், திரு. கந்தசாமிக்கு ரூ. 150 அபராதமும் கட்டத்தவறினுல் 6 வாரம் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட அரிசியை விற்ற பணத்தையும் லாரியையும் அரசு பறிமுதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

Fishing in Periyar Dam

* 265 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that fishing was not allowed for the last 70 years in Periyar Dam;

(*b*) if so, whether fishing was allowed in 1968 ; and

(*c*) the value of the fish caught ?

பெரியாறு அணைக்கட்டில் மீன்பிடித்தல்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :—மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பெரியாறு அணைக்கட்டில் சென்ற 70 வருடங்களாக மீன் பிடிக்க அனுமதிக்கவில்லை என்பது உண்மையா ?